**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.117/2009 உடன் இணைந்த அ.வ.எண்.167/2021**

**தேதி : 14.08.2025**

**(வா.சா.2) – திரு . துரைச்சாமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– (3,4 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் கைப்பட எழுதப்பட்டுள்ள விபரங்கள் என்னால் கைப்பட எழுதப்படவில்லை என்றால் சரிதான். கைப்பட என்ன எழுதப்பட்டுள்ளது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. 5 வது பத்தியில் அவ்வாறு கைப்பட எழுதப்பட்ட விபரத்தை அங்கீகரித்து நான் அதன் அருகில் ஏதும் கையொப்பமோ, கைரேகையோ செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலம் பத்தி 7 ல் 2 வது வரியில் அடித்தல் செய்து கைப்பட எழுதப்பட்டுள்ள விபரங்களை நான் எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி எழுதப்பட்ட விபரங்களின் அருகில் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரிதான். மேற்சொன்ன சுருக்கொப்பம் யாருடையது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் அவ்வாறான சுருக்கொப்பம் பிரமாண வாக்குமூலத்தில் இல்லை.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் கைரேகை செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே தயார் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டால் அதன் அருகில் பிரமாண வாக்குமூலம் கொடுத்தவர் கையொப்பம் செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் கைரேகை வைத்ததாகச் சொல்லும் சமயம் பிரமாண வாக்குமூலத்தில் திருத்தங்கள் இருந்ததா, இல்லையா என்று நான் கவனித்தேனா என்றால் கவனிக்கவில்லை.

3. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள திருத்தங்களை ஏற்றுக்கொண்டு நான் அதன் அருகில் கைரேகை வைக்காத நிலையில்

அவற்றை என்னுடைய சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மனைவி தாக்கல் செய்த அ.வ.எண்.1/2007 வழக்கின் தீர்ப்புரையில் அந்த வழக்கின் தாவா 'ஏ' அட்டவணை சொத்துக்களை அந்த வழக்கின் 9ம் பிரதிவாதியின் குடும்பத்தினர்தான் அனுபவித்து வருகிறார்கள் என்பதை இருதரப்பினரும் ஒத்துக்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி தீர்ப்புரையில் 9ம் பிரதிவாதி திலகவதி என்பவர் 'அ' அட்டவணை சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதை பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.1 முதல் பி.வா.சா.4 வரையான சாட்சிகள் மூலம் தெரியவருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிச்சாமி செட்டியாரின் மருமகள்கள்தான் சூடாமணி, வெள்ளைத்தாய் மற்றும் சரஸ்வதி என்று சொன்னால் சரிதான்.

4. பழனிச்சாமி செட்டியாரும், முருகவேல் செட்டியாரும் நண்பர்கள் என்று சொன்னால் இல்லை. அவர்கள் சம்பந்திகள். பி.வா.சா.ஆ.1 அ.வ.எண்.1/2007 வழக்கின் வழக்குரையில் பழனிச்சாமி செட்டியாரும், முருகவேல் செட்டியாரும் சம்பந்திகள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாததால் அதைப்பற்றி கூற இயலாது. அந்த வழக்கில் பழனிச்சாமி செட்டியாரும், முருகவேல் செட்டியாரும் சம்பந்திகள் என்பதை தெரிவித்துள்ளோமா என்றால் ஞாபகமில்லை. ரெட்டியம்பாடி கிராமம் சர்வே எண்.287ன் விஸ்தீரணம் 17 ஏக்கர் 22 செண்டு நிலமானது எந்தெந்த ஆவணங்களின் வாயிலாக யார் யாருக்குப் பாத்தியப்பட்டது என என்னால் கூற இயலுமா என்றால் 15 வருடங்கள் ஆகிவிட்டதால் என்னால் கூற இயலாது. 15 வருடங்கள் என்பது எதிலிருந்து 15 வருடங்கள் என்று கேட்டால் அதை நான் குத்துமதிப்பாக கூறுகிறேன்.

5. ரெட்டியம்பாடி கிராமம் சர்வே எண்.287ன் விஸ்தீரணம் 17 ஏக்கர் 22 செண்டு தொடர்பான அசல் ஆவணங்களை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். எஸ்.ஆர்.எம்.ராஜேந்திரன் உயிருடன் இருக்கும்போது எவ்வித வருமானமும் ஈட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. வருமானம் ஈட்டி

வந்தார். எஸ்.ஆர்.எம்.ராஜேந்திரன் எதன் மூலம் வருமானம் ஈட்டிவந்தார் என்பதற்கு ஆவணங்கள், ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை. மகனைப் பற்றி தந்தை சொன்னால் சரியாகத்தான் இருக்கும் என்றால் சரிதான்.

6. எஸ்.ஆர்.எம்.ராஜேந்திரன் தகப்பனார் எஸ்.ஆர்.முருகவேல் செட்டியார் அவர் எழுதிவைத்த பி.வா.சா.ஆ.71 மற்றும் பி.வா.சா.ஆ.72 உயிலில் இளைய மகன் ராஜேந்திரனுக்கு பல தவணைகளில் பணம் கொடுத்து உதவியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் உயிலில் அப்படி இருக்கலாம், உண்மையில் அப்படியில்லை. ராஜேந்திரன் மகன் இறந்தபின்பு ராஜேந்திரனின் மனைவியும், மகளுமான இவ்வழக்கின் வாதிகளில் பராமரிப்பிற்காக ரூ.7,00,000/–த்தை 1ம் வாதி சாந்தியின் தகப்பனார் அப்பாசாமி (எ) சண்முகத்திடம் கொடுத்து வைத்திருப்பதாக உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

7. மேற்படி உயிலில் எஸ்.ஆர்.முருகவேல் செட்டியார் அவரது சொந்த முயற்சியாலும், அவர் மனைவிக்கு பாத்தியமான சொத்துக்களை விவசாயம் செய்தும், குத்தகைக்கு விவசாயம் செய்தும் சம்பாதித்து வந்த வருமானத்தை வைத்து எஸ்.ஆர்.முருகவேல் செட்டியார் பெயரிலும், அவரது ஆண் மக்களான மனோகரன் மற்றும் எம்.ராஜேந்திரன் ஆகிய மூவர் பெயரிலும் அவர் கிரையம் வாங்கி சுவாதீனத்தில் இருந்து வருவதாக உயிலில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் 9ம் தாள் 3ம் பத்தியில் தனது மூத்த மகன் மனோகரன் தன் மூன்று பெண் குழந்தைகளுடன் அவரது குடும்பத்துடன் இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

8. இரண்டாவது மகன் ராஜேந்திரன் என்பவர் சாந்தி என்பவரை திருமணம் செய்து, சுஜிதா என்ற பெண் குழந்தையுடன் திருப்பூரில் வாழ்ந்து வந்து 27.09.1989ம் தேதியன்று காலமாகிவிட்டதாக மேற்சொன்ன உயிலில் முருகவேல் செட்டியார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ராஜேந்திரன் திருப்பூரில்தான் தனது குடும்பத்துடன் இருந்தார் என்றால் சரிதான். அந்த

சமயத்தில் திருப்பூரில், 1ம் வாதி சாந்தியின் தகப்பனார் அப்பாசாமி என்ற சண்முகத்தின் வீட்டில்தான் ராஜேந்திரன் அவரது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான்.

9. ராஜேந்திரன் இறந்தபின்பும் வாதிகள் இருவரும் 1ம் வாதியின் தகப்பனார் வீட்டில்தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரனோ, அவரது குடும்பத்தினரோ முருகவேல் செட்டியாரை கவனிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எஸ்.ஆர்.எம்.ராஜேந்திரன் பெயரிலான கிரைய ஆவணத்திற்கான முழுப்பணத்தையும் முருகவேல் செட்டியார்தான் செலுத்தினார் என்றால் சரிதான். எஸ்.ஆர்.எம்.ராஜேந்திரன் பெயரிலான கிரைய ஆவணத்தில் உள்ள சொத்துக்களைப் பொறுத்து அவர் முருகவேல் செட்டியாரின் பினாமிதான் என்றும், ராஜேந்திரன் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் பொறுத்து அவரது வாரிசுகளான இவ்வழக்கின் வாதிகளுக்கும், ராஜேந்திரனின் தாயாருக்கும் எவ்வித பங்கும் கிடையாது என்றால் சரிதான்.

10. எஸ்.ஆர்.முருகவேல் செட்டியார் அவர் வாழ்ந்த காலத்தில் சுயமாக நன்றாக சம்பாதித்தார் என்றால் சரிதான். அவர் செலவும் செய்தார். நான் திருப்பூரில் இருப்பதால் வாதிகள் என் பக்கத்து நிலத்துக்காரர்கள் என்று கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் 'ஏ' அயிட்ட சொத்து என்னவென்று கேட்டால் என்னால் பார்த்தால்தான் சொல்லமுடியும். வழக்குச் சொத்துக்கள் எந்தெந்த கிராமத்தில் உள்ளது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் கண்டியன்கோவில் கிராமத்தில் உள்ளது. வேறு எந்தக் கிராமத்திலும் இல்லை. எனக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

11. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியாமல் நான் சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்படவில்லை என்றும், அதில் உள்ள சங்கதிகள் தவறு என்றும்

சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.1/2007 வழக்கில் இந்த வழக்கின் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதியின் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நான் பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. என் மனைவி சூடாமணி, வெள்ளைத்தாய் மற்றும் முருகவேல் செட்டியாரின் மகளான செல்லம்மாள் என்ற செல்லக்கண்ணு மற்றும் சரஸ்வதி ஆகியோர் பெயரில் உள்ள ரெட்டியம்பாடி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் முருகவேல் செட்டியாரால் தொகை செலுத்தப்பட்டு அவர்கள் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

12. முருகவேல் செட்டியாரின் மகன் எஸ்.ஆர்.எம்.மனோகரன் கடந்த 25.01.2006 தேதியன்று எழுதிய அவ்வழக்கின் பி.வா.சா.ஆ.60 உயிலான இவ்வழக்கின் பி.வா.சா.ஆ.73–ஐ பொறுத்து அ.வ.எண்.1/2007 வழக்கில் என் மனைவி தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய மனைவி சூடாமணி, வெள்ளைத்தாய் ஆகியோர் பெயரிலான ரெட்டையம்பாடி கிராம சொத்துக்களைப் பொறுத்து அசல் ஆவணங்கள் முருகவேல் செட்டியார் வசம் இருந்தது என்று சொன்னால் சரிதான். முருகவேல் செட்டியார் இறந்தபின்பு அந்த ஆவணங்கள் அனைத்தும் அவரது மகனான எஸ்.ஆர்.எம்.மனோகரன் வசம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

13. எஸ்.ஆர்.எம்.மனோகரன் இறந்தபிறகு 2,3,4 பிரதிவாதிகள் வசம் மேற்படி அசல் ஆவணங்கள் இருந்து வருவதாகச் சொன்னால் எனக்கு தெரியாது. முருகவேல் செட்டியாரின் குடும்பத்தினருக்குத்தான் தெரியும். முருகவேல் செட்டியாரின் குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. முருகவேல் செட்டியாரின் குடும்பத்தில் நிகழ்வுகள் பொறுத்து நான் அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.14 17:49:32 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.